# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29.10.2010 அன்று

## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அதிகாரம் அந்நிஸாவின் 49 வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இந்தப் பாவத்)தை விடக் குறைந்ததை, தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு (எதையாவது) இணைவைப்பவன், மாபெரும் பாவத்தை உருவாக்கிக் கொண்டான். (3:49)**

புதிய கண்டுபிடிப்புகள் மூலமாக ஒரு மனிதர் மற்றவரை எந்த அளவுக்கு நெருங்கிக் கொண்டே செல்கின்றார்? இந்த கண்டுபிடிப்புகள் மூலமாக ஆயிரம் மைல்களுக்கு தொலைவிலுள்ள ஒருவர் மற்றவரைத் தொடர்பு கொள்வதில் பலன் பெறுகின்றார். எங்கு, ஒருவர் மற்றவர்களுக்கிடையிலான தொடர்புகளால் முன்னேற்றத்திற்கான வழி திறந்திருக்கின்றதோ, அங்கு தீமைகளும் அதிவேகமாகப் பரவுகின்றது. தீமைகள் மனிதனை மிக வேகமாக கவருகின்றது. இதன் காரணமாக மனிதன் அதனை அடைவதற்கும் அதனைப் பரப்புவதற்கும் மிக ஆர்வமாக செயல்படுகின்றான். இத்தகைய தருணத்தில் அவன் தன்னை யாரென்று அறிவதை மறந்து விடுகின்றான். மேலும் அவன் தனக்கு என்ன பொறுப்பு இருக்கின்றது? சமுதாயத்தில் என்ன மதிப்பு இருக்கின்றது? என்பதையும் மறந்து விடுகின்றான். எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருக்கின்றான்; இறைவனுக்கு எது விருப்பமானது? எது விருப்பமற்றது என்பதையும் மறந்து விடுகின்றான். முஸ்லிமாக இருக்கின்ற ஒருவன் இறைவன் தன்னை எதற்காகப் படைத்துள்ளான்? என்ற நோக்கத்தையும் மறந்து விடுகின்றான். ஆக, உலகில் எந்த அளவுக்கு தீமைகள் பரவியிருக்கின்றது என்றால், ஒரு சில நல்லவர்கள் கூட இதில் சிக்கி விடுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், ஒரு சில அஹ்மதிகள் கூட இதனைச் செய்ய முன்வந்து விடுகின்றனர். இறுதியில் இதனுடைய முடிவு மிக தீயதாகவும் வெளிப்படக்கூடும். மனிதனை மிக எளிதாக சிக்க வைத்துக் கொள்ளும் இந்த தீய செயலானது ஒரு சாதாரண விஷயமல்ல. மாறாக, இறைவனிடத்தில் அது மன்னிக்க முடியாத பாவமாக இருக்கின்றது. இந்த செயல் தான் ஷிர்க் ஆகும். இதனைப் பற்றி தான் இறைவன் நான் ஓதிய வசனத்தில் கூறுகின்றான்.

அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு எதிராக வரக்கூடிய அனைத்து செயல்களும் அது சிறியதாக இருந்தாலும் சரி, மன்னிக்க முடியாத செயலாக ஆகி விடுகின்றது. ஆக, நான் ஏகத்துவத்தில் நிலைத்திருக்கின்றேன்; நான் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறக்கூடியவனாக இருக்கின்றேன் என்று வாதம் செய்யக் கூடியவர், ஏகத்துவத்தின் நுட்பமான கருத்தைப் புரிந்தவாறு, ஷிர்க்கின் நுட்பமான விஷயத்தைப் புரிந்தவாறு, ஏகத்துவத்தை சரியான முறையில் விளங்கிக்கொள்ளாத இந்த உலகத்தில் ஒவ்வொரு அடியையும் மிகவும் கவனத்துடன் எடுத்து வைப்பது அவசியமாகும். குறிப்பாக அஹ்மதிகள் இவ்விஷயத்தை நன்றாக கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது நாம் காலத்தின் இமாமின் கையில் பைஅத் செய்து இணையும் பாக்கியத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த தீய செயலினை (ஷிர்க்கினை) பைஅத்தின் நிபந்தனையின் முதல் நிபந்தனையாக வைத்துள்ளார்கள். அந்த நிபந்தனையில் இவ்வாறு வருகின்றது.

அதாவது, பைஅத் செய்பவர், நான் கபரில் அடக்கம் செய்யப்படும் வரை ஷிர்க்கிலிருந்து முழுமையாக விலகி இருப்பேன் என்று உண்மையான உள்ளத்துடன் உறுதிமொழி கூற வேண்டும். அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்தில் நுழைவதற்கு இது முதல் நிபந்தனையாகும். முஸ்லிம்கள் ஆரம்பத்திலேயே லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறக்கூடியவர்கள் தானே என்று ஒரு சிலர் கூறலாம். அவர்கள் இந்தக் கலிமாவைப் படிக்கின்றார்கள்(தான்). ஆனால் அஹ்மதிகள் இவ்வாறான முஸ்லிம்களை உண்மை இஸ்லாத்தின் பக்கம் அழைத்து வர வேண்டும். இதேபோன்று மாற்று மதத்தவர்களையும், எந்த மதத்தையும்

சாராதவர்களையும் உண்மை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் ஷிர்க் முதல் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. அதாவது எப்பொழுதும் ஷிர்க்கின் பக்கம் செல்லமாட்டேன் என்ற நிபந்தனையானது, ஒரு முஸ்லிம் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைப் படிக்கின்றார்; பகிரங்கமான முறையில் ஷிர்க்கை எதிர்த்தும் வருகின்றார். ஆனால் நாம் பார்க்கின்றோம். எவ்வாறிருந்தபோதிலும் முஸ்லிம்கள் தனது மறைமுகமான ஷிர்க்கை கவனத்தில் கொள்வதில்லை. அஹ்மதிய்யத்தில் இணையக் கூடிய முஸ்லிம்கள் இந்த நிபந்தனை ஒன்றும் மிகப் பெரியதல்ல என்று சொல்வது வேண்டுமானால் எளிதாக இருக்கலாம். ஆனால் சிந்தித்துப் பார்த்தோம் என்றால், முஸ்லிம்கள் வெளிப்படையான ஷிர்க்கில் சிக்கியிருக்கவில்லை என்றாலும், அவர்கள் மறைமுகமான ஷிர்க்கில் சிக்கியிருக்கின்றார்கள் என்பது புரிய வரும். கபர் வணங்கிகளில் ஒரு கூட்டம் (கபரின் முன்னால்) ஸஜ்தா செய்கின்றது என்றால், இன்னொரு கூட்டம் (கபரின் முன்) ஸஜ்தா செய்யாவிட்டாலும் நேர்த்திக்கடன் செய்து ஒரு மறைமுகமான ஷிர்க்கில் சிக்கியிருக்கின்றார்கள். மூன்றாவது கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கபரில் துஆ செய்யும் போது இறைவனிடம் துஆ செய்வதற்குப் பதிலாக எந்த கபரின் முன் துஆ செய்கின்றார்களோ அந்த கபரில் அடக்கம் செய்யப்பட்டவர்களிடம் துஆ கேட்கின்றார்கள். இவ்வாறான ஒரு சில சம்பவங்களும் இருக்கின்றன.

ஒரு பெண்மணி கூறுகின்றார்: நான் குழந்தைக்காக இறைவனிடம் துஆ செய்த போது குழந்தை பெறவில்லை. ஆனால் தாதா சாஹிபின் சன்னிதியில் குழந்தைக்காக துஆ செய்த போது குழந்தை பிறந்தது. பொதுவாக பெண்களின் ஈமான் பலவீனமானதாகவே இருக்கின்றது. முஸ்லிம்களில் பெரும்பாலார் தொழுகை மற்றும் இபாதத்தின் பக்கம் கவனம் ஏற்படுவதில்லை. ஏனென்றால், குறிப்பாக ஆண்களும் பொதுவாக பெண்களும் இவ்வாறான சம்பவங்களின் விளைவாக ஈமானில் பலவீனத்தைக் காட்டுகின்றார்கள். ஒரு சில நேரங்களில் ஈமான் முற்றிலும் அழிந்தும் விடுகின்றது. ஆனால் ஹஸ்ரத் தாதா ஸயீம் பக்ஷ் அல்லது வேறு ஏதாவது ஒரு பீர், ஃபகீரின் மீது இவர்களின் ஈமான் இறைவனைக் காட்டிலும் அதிகமாகி விடுகின்றது. ஆண்களும் பெண்களும் கணிசமான முறையில் இவ்விஷயத்தில் சமமாகவே இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் ஐவேளை தொழுகையானது சுமையாகவே தெரிகின்றது. இவ்வாறான கபரில் சென்று தமது ஆசையை விருப்பத்தை தெரிவித்து துஆ செய்து தமது கஷ்டங்களைப் போக்குவதே இவர்களுக்கு எளிய வழியாக தென்படுகின்றது. மேலும் இதுபோன்ற சம்பவம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினரிடமும் பரவுகின்றது. இவ்வாறு இறைவன் மீதுள்ள ஈமான் சிறிது சிறிதாக குறைந்து கொண்டே செல்கின்றது.

ஒரு இந்து பெண்மணியின் கவிதை எனது பார்வையில் தென்பட்டது. அப்பெண்ணுக்கு இக்கால முஸ்லிம்களின் மத்தியில் இருக்கும் பித்அத் ஆனது, இக்கவிதையினை எழுத தைரியத்தைக் கொடுத்தது. அதில் அந்தப் பெண் இவ்வாறு கூறுகின்றாள். நாம் இந்துவில் தேவி, தேவதையை பூஜை செய்கின்றோம். முஸ்லிம்களும் கபருக்கு சென்று பீர், ஃபகீரை பூஜை செய்து அதன் முன் ஸஜ்தா செய்கின்றார்கள். அந்த பெண் நவூதுபில்லாஹ் எதுவரை கூறிவிட்டார்கள் என்றால், நீங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை இறைவனாக்கி விட்டீர்கள். எவ்வாறிருந்த போதிலும், ஓர் உண்மையான முஃமினுக்கு இது ஒரு வெறுக்கத்தக்க குற்றச்சாட்டாக இருக்கின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட மேலான ஏகத்துவத்தை நிலைநாட்டியவர் (இவ்வுலகில்) இருந்ததில்லை. இனியும் இருக்க முடியாது; இனி உருவாகவும் முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட மேலாக, ஏகத்துவத்தில் தன்னை மாய்த்துக் கொண்டவர் இவ்வுலகில் உருவாகவில்லை. இனியும் உருவாகப் போவதில்லை. எவர் எல்லா விஷயத்திலும் இறைவனுக்கு முன்னுரிமை வழங்குகின்றாரோ அவரால் மட்டும் ஏகத்துவத்தின் உண்மையான கருத்தை விளங்க முடியும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் மேலாக ஏகவத்துவத்தின் உண்மையை அறிந்து அனைத்து விஷயத்திலும் அவனுக்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர் எவர்தான் இருக்க முடியும்? அன்னாரின் நுபுவ்வத்தின் முன்புள்ள காலமே இவ்வனைத்திற்கும் சாட்சி பகர்கின்றது. மணிக்கணக்காக, நாள் கணக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனிமையில் இபாதத்தில் மூழ்கியிருந்தார்கள். அன்னாரின் ஒரு துஆ இருக்கின்றது. இந்த துஆ அன்னாரின் இறை அன்பு, அவன் மீதுள்ள நாட்டத்தை அறியச் செய்யக் கூடியவையாக இருக்கின்றது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது எஜமானின் சன்னிதியில் மிகவும் ஏக்கத்துடன் இதனை கேட்கின்றார்கள்.

அதவாது, **அல்லாஹும் அர்ஸுக்னி ஹுப்பக்க, வஹுப்ப மய்யன்ஃபஃனீ ஹுப்பஹு இன்தக, அல்லாஹும்ம மா ரஸக்தனி மிம்மா உஹிப்பு ஃபஜ்அல்ஹு குவ்வதன் லீ ஃபீமா துஹீப்பு. வமா ஸவ்யத்த அன்னி மிம்மா உஹிப்பு ஃபஜ்அல்ஹு ஃபாரகன்லீ ஃபீமா துஹிப்பு –** அல்லாஹ்வே! எனக்கு உனது அன்பினை வழங்குவாயாக! மேலும் உன்னிடத்தில் எந்த அன்பு பலன் தரக்கூடியதாக இருக்கின்றதோ அதனை எனக்கு வழங்குவாயாக! அல்லாஹ்வே! எனக்கு பிடித்தமானதை வழங்குவாயாக! அதன் மூலம் எனக்கு உறுதியை வழங்குவாயாக! உனது அன்பில் முன்னேறுவதற்கு காரணமாக ஆக்குவாயாக! ஈமானில் முன்னேற்றத்தை வழங்கக்கூடியதாக ஆக்குவாயாக! மேலும் எனக்கு பிடித்தமானது என்னிடமிருந்து விலகும்போது உன்னிடமிருந்து நீ உனக்கு பிடித்தமானதை வழங்குவாயாக!

ஆக, ஒரு சிலர் எவ்வாறு கூறுகின்றார்கள் என்றால், நாங்கள் ஏன் பீர், ஃபகீர்மார்களின் கபருக்கு செல்கிறோம் என்றால் அவர்கள் இறைநேசர்களாக இருந்தார்கள். இது சம்பந்தமாக இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிடுகின்றான். அதாவது சிலையை வணங்கக்கூடியவர்கள் அந்த சிலையானது எங்களை இறைவனிடம் சேர்க்கக் கூடியதாக இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். இது தவறான கண்ணோட்டம் ஆகும். அவர்கள் இந்த துஆவினை பீர், ஃபகீர் கபரில் சென்று செய்யக் கூடியவர்களாக இருந்தால், அவர்கள் ஷிர்க்கிலிருந்து முற்றிலும் விலகியவர்களாக இருந்தால், அவர்கள் அந்த பீர், ஃபகீர் உண்மையாகவே தூய்மையாளர்களாக இருந்தார்களா என்பதை சிந்தித்தவாறு இந்த துஆவை செய்வார்கள் என்றால், இறை சன்னிதியில் அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது அல்லாமல் நீங்கள் இறைவனுக்கு நேர் எதிராக அந்த பீர், ஃபகீர் எங்களுக்கு குழந்தையினை வழங்கினார்கள் என்று கூறுவதால் அது இஸ்லாம் அல்லாத மற்றவர்களுக்கு ஆட்சேபனை செய்வதற்கான வழியினை வகுக்கிறது. அன்னாரின் மீதும் தனிப்பட்ட ரீதியில் ஆட்சேபனை செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்து விடுகின்றது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு சஹாபாக்களுக்கு தர்பிய்யத் வழங்குவதில் எந்த அளவுக்கு கவனம் இருந்ததென்றால், ஏகத்துவத்தினை நிலைநாட்டுவதன் பக்கம் எவ்வாறான கவனத்தினை வழங்கினார்கள் என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு சாதாரண காட்டுதலுக்காக செய்யக்கூடிய செயலும் கூட ஷிர்க் ஆகும் என்று கூறினார்கள். நீங்கள் இபாதத்தினையும் தொழுகையினையும் காட்டுவதற்காக செய்தால் அதுவும் ஷிர்க் ஆகி விடும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த துஆவினை செய்து வாருங்கள். அதாவது, அல்லாஹ்வே! நாங்கள் அறிந்து செய்யக் கூடிய ஷிர்க்கிலிருந்து உனது பாதுகாப்பில் வருகின்றோம். மேலும் நாங்கள் அறியாமல் இதனை செய்வதிலிருந்தும் உனது மன்னிப்பை நாடக்கூடியவர்களாக இருக்கின்றோம்.

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு எந்த நேரத்திலும் ஷிர்க்கிலிருந்து பாதுகாப்புடன் இருக்க வலியுறுத்திக் கூறி வந்தார்கள். மேலும் இதற்காக நானும் ஒரு மனிதன் தான் என்று கூறினார்கள். அன்னாரைக் கண்டு யாரும் அச்சம் கொண்டால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நான் ஒரு சாதாரண பெண்ணின் குழந்தை தான். அல்லாஹ்வும் அன்னார் மூலம் இதனையே அறிவிக்க செய்தான். அதாவது நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான் என்று கூறினார்கள். எவ்வாறிருந்தபோதிலும், இவ்விஷயமானது அதாவது நவூதுபில்லாஹ் நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இறைவனாக ஆக்கி விட்டீர்கள் என்ற கூறிய அப்பெண்ணின் கூற்றானது முற்றிலும் தவறாகும். மேலும், நாங்கள் எவ்வாறு தேவி, தேவதையை மட்டுமல்லாமல் கிருஷ்ணனுக்கும் இறை இடத்தைக் கொடுத்து வைத்திருக்கின்றோமோ அவ்வாறே நீங்களும் செய்கின்றீர்கள் என்று அப்பெண் கூறுவதும் தவறாகும். ஆனால் நீங்கள் கபருக்கு இறைவனின் இடத்தைக் கொடுத்து விட்டீர்கள் என்று கூறுவது சரியானதாகும். ஆக முஸ்லிம்களுக்கு இத்தருணம் சிந்திக்கும் தருணமாக இருக்கின்றது. ஏனென்றால் ஏகத்துவத்தின் கொடியினை பறக்க விடுபவர்களின் மீது ஷிர்க்கின் குற்றச்சாட்டு வைக்கப்படுகின்றது. இக்குற்றச்சாட்டினை சாதாரண முஸ்லிம்கள் அகற்ற முடியாது. ஆனால் ஒவ்வொரு அஹ்மதிகளும் தனது நிலையிலும், செயலிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது கடமையாகும். மேலும் நமது பேச்சிலும், செயலிலும் இறைவனின் பண்புகள் வெளிப்படும் வண்ணம் நமது இபாதத் இருக்க வேண்டும். மேலும் ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமானால்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரி மற்றும் அன்னாரின் போதனையின்படி நடப்பதால் மட்டுமே நிலைநாட்ட முடியும் என்பதை உலகிற்குப் புரிய வையுங்கள். மேலும் உண்மையான ஏகத்துவத்தை விட்டு விட்ட முஸ்லிம்களுக்கு கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதன் மூலமே உண்மையான ஏகத்துவத்தை நிலை நாட்ட முடியும் என்று ஒவ்வொரு அஹ்மதியும் கூறி வர வேண்டும். இது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பும், பைஅத்தின் நிபந்தனையின் முதல் நிபந்தனையும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கமும் ஆகும். நாம் நமது எஜமானரின் அடிமையின் உரிமையினை வழங்கியவாறு ஏகத்துவத்தினை நிலைநாட்டுவதில் முயற்சியினை மேற்கொள்ளுங்கள். அதன் பிறகு ஷிர்க்கிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியவாறு அல் வஸிய்யத் என்னும் நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

இறைவன் உலகில் பலதரப்பட்ட மக்களையும் பலவகையான ரூஹ் –ஐயும் அது ஐரோப்பாவில் இருந்தாலும் சரி, ஆசியாவில் இருந்தாலும் சரி அவர்களில் நல்லியல்பு கொண்டவர்களை ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பதையே விரும்புகின்றான். மேலும் தமது அடியானை ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைப்பதையும் விரும்புகின்றான். இதுவே இறைவனின் குறிக்கோளாகும். இதற்காகத்தான் நான் இவ்வுலகத்தில் அனுப்பப்பட்டிருக்கிறேன். நீங்கள் இக்குறிக்கோளினை மென்மையுடனும், நன்னடைமுறையினையும் கொண்டும் துஆவில் ஓர் அழுத்தத்தைக் காட்டியவாறும் பின்பற்றுங்கள்.

ஆக இதில் ஓர் அஹ்மதியின் கடமையும் இணைந்திருக்கிறது. அவர்கள் இறைவனின் இவ்விருப்பத்தை புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இறைவனின் இக்கட்டளையை புரியக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இறைவன் புறமிருந்து நம்மீது சுமத்தப்பட்ட பொறுப்பினை புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும். காலத்தின் இமாமின் தொண்டனாக மாற வேண்டும். தனது அனைத்து சொல், செயல் மூலமாக தவ்ஹீதை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். முஸ்லிம்களை மட்டுமல்ல. மற்ற மதத்தைச் சார்ந்தவர்களையும் ஏகத்துவத்தினை புரிய வைத்து ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இதற்கான நல்வழி என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று உங்களது பேச்சில் மென்மை இருக்க வேண்டும். நடைமுறையில் உயர்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். அதனைக் கண்டு மக்கள் உங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். மேலும் இவ்வனைத்திற்கும் மேலாக துஆவில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்துங்கள். இதனை நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஒரு சில பித்அத்துகள் நடைமுறையில் வந்து விட்டால் அது அசல் போதனையிலிருந்து விலக்கி விடும். பிறகு இறைவன் அனுப்பிய அசல் போதனையினை மனிதன் மறந்து விடுகின்றான். இந்தப் பித்அத்தானது அநேக நேரங்களில் மார்க்கத்தைக் களங்கப்படுத்துவது மட்டுமல்லாமல், அல்லாஹ்விற்கு எதிராக செயல்படச் செய்து விடும். கடந்து சென்ற அனைத்து மார்க்கங்களும் ஏன் இன்று தனது அசல் போதனையினை கைவிட்டு இருக்கின்றதென்றால் காலம் செல்லச் செல்ல அக்காலத்துடன் பலவகையான பித்அத்துகளும் நுழைந்து விட்டன. பிறகு அதனை அகற்றுவதற்கு எவரும் வரவில்லை. வருவதாக இருந்ததுமில்லை. ஏனென்றால் இஸ்லாம் தான் இறுதி நாள் வரை தனது அசல் போதனையில் நிலைத்திருக்கக்கூடியது ஆகும். மேலும் (இதற்காக) எவர் வரவிருந்தாரோ அவர் இறுதி நபியாகிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களே ஆகும். அவர்கள் அனைத்து பித்அத்துகளையும் மார்க்கத்தில் ஏற்பட்ட அனைத்து களங்கத்தையும் உண்மையின் போதனையுடன் நீக்கக் கூடியவர்களாக திகழ்ந்தார்கள். நான் கூறியது போன்று முஸ்லிம்களிடம் தவறான முறையில் இந்த பித்அத்துகள் இடம்பிடித்துக் கொண்டது. இது மட்டுமல்லாமல் ஒரு சில பித்அத்துகள் மறைமுகமான ஷிர்க்கினை மட்டும் உருவாக்குவதில்லை. மாறாக, வெளிப்படையான ஷிர்க்கினையும் உருவாக்கி விடுகின்றன. ஆனால் இறைவன் காலத்தின் இமாமை அனுப்பி இவ்வாறான ஷிர்க் மற்றும் பித்அத்துகளிலிருந்து இஸ்லாத்தைப் பாதுகாத்து விட்டான். மேலும் இன்ஷா அல்லாஹ் இது பாதுகாப்பாக இருக்கவும் செய்யும். முஸ்லிம்களின் மத்தியில் இடம்பிடித்திருக்கும் இவ்வாறான பித்அத்துகள், மற்றும் அவர்களின் தவறான நடைமுறையினை அடையாளம் காட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் சஹாபாக்களின் நடைமுறை எவ்வாறிருந்ததோ அதுவே நமது நடைமுறையாகும். இன்றைய காலத்தில் பகீர்மார்கள் பல பித்அத்துகளை உருவாக்கி விட்டார்கள். உதாரணமாக, இவர்கள் உணவு எதுவும் உண்ணாமல் தனிமையில் இருந்து நோன்பு நோற்று ஒரே துஆவினை தினமும் ஓதி வருவது உகந்த செயல் அல்ல. இஸ்லாத்தின் உண்மையான வழி எதுவென்றால் குர்ஆனை சிந்தித்து ஓதுவதும் அதன்படி அமல் செய்வதும் கவனத்துடன் தொழுகையை தொழுவதும் இறைவனிடம் துஆ கேட்பதும் ஆகும். ஆக, தொழுகை மிஃராஜின் அந்தஸ்தை அடையச் செய்கிறது. தொழுகை இருக்குமென்றால் அனைத்தும் இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சில வஸீஃபாக்களை (தனிமையில் இருந்து கொண்டு எதனையும் உண்ணாமல் பருகாமல் ஒரே துஆவைச் செய்து கொண்டிருந்தல்) இஸ்லாத்தில் புகுந்த பித்அத்களாக கருதியுள்ளார்கள். ஏனென்றால் இதன் மூலம் அசல் கருத்தினை மறந்து விடுகின்றார்கள். இதன் மூலம் அசல் தொழுகையினை மறந்து விட்டு, வஸாஃபின் பக்கம் ஈர்க்கப்பட்டு விடுகின்றார்கள். எனவே இதுவும் ஒரு வகையில் ஷய்த்தானிய செயலாக மாறி விடுகின்றது.

ஒரு பெரியவரின் கதை ஒன்று இவ்வாறு வருகிறது. அவரது மனைவி மிக நல்லவராக இருந்தாள். தொழக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் இருந்து வந்தார்கள். அவர்கள் மக்களின் பார்வையில் படாமல் தனிமையில் இருந்து நோன்பு நோற்று வஸாஃபியினை செய்துவரத் தொடங்கி விட்டார். அதன் பக்கம் அதிகமாக ஈர்க்கப்பட்டவராக ஆகி விட்டார்கள். அப்பெரியவருக்கு சந்தேகம் ஏற்பட்டு (அவர்களை கவனித்த போது) அப்பெண் வஸாயிஃப் செய்யக்கூடியவராக இருந்தார். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்ததனால் சிறிது சிறிதாக தஹஜ்ஜுத் தொழுகையையும் விட்டு விட்டார்கள். ஒரே இடத்தில் இவ்வாறு திக்ர் செய்வதை தொடர்ந்து செய்து வந்தார்கள். இதற்கு அப்பெரியவர் கூறினார். நீ செய்யும் இந்த செயல் மூலம் ஷய்த்தான் உன்னை வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றான். எனவே இதிலிருந்து பாதுகாப்புத் தேடிக் கொள். ஏனென்றால் இது இறை கட்டளை அல்ல என்று கூறினார். நீ இதிலிருந்து பாதுகாப்பை நாடினால் **லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லாஹ் பில்லாஹ்** - நன்மையைச் செய்யும் ஆற்றலும், தீமையிலிருந்து தடுக்கும் ஆற்றலும் உன்னிடமேயன்றி வேறில்லை என்ற துஆவை செய்ய வேண்டும். நீ இதிலிருந்து பாதுகாப்பு பெற்று விடுவாய் என்று கூறினார். ஒரு சில நாட்களுக்குப் பிறகு அவள் தனது ஃபர்ளான தொழுகையை விட்டு விடுவதான உணர்வைப் பெற்றார். பிறகு அவர் **லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லாஹ் பில்லாஹ்** - நன்மையைச் செய்யும் ஆற்றலும், தீமையிலிருந்து தடுக்கும் ஆற்றலும் உன்னிடமேயன்றி வேறில்லை என்ற துஆவை செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு சிறிது சிறதாக தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட்டது. பிறகு தஹஜ்ஜுத் தொழுகை, நஃபில் தொழுகையின் பக்கமும் கவனம் ஏற்பட்டது. ஒரு சில நேரங்களில் மனிதன் ஒரு சில விஷயத்தைப் பற்றி முழுமையாக அறிந்திருக்கமாட்டான். ஒருவர் தான் செய்யும் ஒரு சில நன்மையான செயலை சரியெனக் கருதி அதனை செய்வதில் அதிகமான பலன் இருக்கிறது என்று எண்ணுகின்றார். மேலும் திக்ர் செய்வதால், வஸாஃபியினை மேற்கொள்வதால் மிகப்பெரிய அந்தஸ்து கிடைக்கும் என்று நினைக்கின்றார். திக்ர் செய்வது நல்ல விஷயம் தான். அதன் மூலம் நாம் நமது நாவினை எப்பொழுதும் ஈரப்பதமாக வைத்திருக்க வேண்டும். ஆனால் இதனை செய்வதற்கு முன்பு இறைவன் நியமித்திருக்கும் ஃபர்ளான கட்டளைகளை நிறைவேற்றிய பிறகு செய்ய வேண்டும். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நமக்கு தஹஜ்ஜுத் மற்றும் நஃபிலானவற்றை எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். அதன்படி செயல்பட்டால் நமது செயல் சரியானதாக அமையும். ஆனால் ஒரே விஷயத்தில் மூழ்கியிருந்தவாறு கடமையானவற்றை விட்டுவிடுவது தவறான செயலாகும்.

எனவே நாம் எப்பொழுதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். திக்ர் செய்யும் மஜ்லிஸ், இறைவனை நினைவு கூறும் மஜ்லிஸ் இவை யாவும் நல்ல மஜ்லிஸ்தான். ஆனால் இது தனது எல்லையை மீறி விடும்போது ஷய்த்தானிய செயலாகவே அது மாறி விடுகின்றது. ஆக இறைவன் எதனை கட்டளையிட்டிருக்கின்றானோ அதுதான் உண்மையான நன்மையான காரியமாகும். அதுதான் தவ்ஹீதை நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஆக வெளிப்படையான முறையில் நாம் செய்யும் ஒரு சில நற்காரியங்கள் பித்அத் ஆக மாறி விடுகின்றது. சமுதாயத்தில் தீய தாக்கத்தை உருவாக்கும். நன்மை என்று நினைத்து செய்யும் பித்அத்துகள்

அசல் ஃபர்ளினை நிறைவேற்றுவதிலிருந்து விலக்கி விடுகின்றது. ஆகவே மிகவும் கவனமாக நாம் ஒவ்வொரு நற்காரியத்தையும் செய்து வர வேண்டும். அது ஃபர்ளான தொழுகையாக இருந்தாலும் சரி, நஃபில், தஹஜ்ஜுத் மற்றும் இதர காரியங்களாக இருந்தாலும் சரி துஆ, திக்ரிலும் கவனம் இருக்க வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதன் உண்மையான முஃமின் ஆவதன் பக்கம் காலடி எடுத்து வைப்பான். இந்த சமுதாயத்தில் ஏற்படும் பித்அத்துகளிலிருந்து தப்பிப்பதற்கு ஓர் அஹ்மதி ஜிஹாத் போன்ற செயலை மேற்கொள்ள வேண்டும். நான் தொடக்கத்தில் கூறியது போன்று புதிய புதிய கண்டுபிடிப்புகள் ஒரு சில தீமைகளை பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் எதையும் சிந்திக்காமலும் யோசிக்காமலும் தன்னை மட்டுமல்லாமல் தனது குழந்தைகளையும் இதன் பக்கம் விழச் செய்து விடுகின்றார்கள். அவர்களுக்கு இதன் உண்மை நிலை என்னவென்று கூட அறியாமல் சமுதாயத்தை பின்தொடர்ந்தவாறு அதனை அவர்களும் செய்யத் தொடங்கி விடுகின்றார்கள். நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த அந்த துஆவின் பக்கம் நமது கவனம் இருந்தால் நாம் நம்மையும் அறியாமல் செய்யக் கூடிய தவற்றைக் கூட இறைவன் மன்னித்து விடுகின்றான். மேலும் அதிலிருந்து அவன் பாதுகாப்புப் பெற்றவனாக ஆகி விடுகின்றான்.

எவ்வாறிருந்த போதிலும் இன்றைய காலத்தில் இந்த மேற்கத்திய நாடுகளில் இவ்வாறான தீய கலாச்சாரங்கள் நடைபெறுகின்றன. இன்னும் ஒரு சில நாட்களில் நடைபெறவும் இருக்கின்றன. இது ஒரு கலாச்சாரமாகவே இருந்து வருகிறது. அதனைப் பற்றி நான் கூற விரும்புகின்றேன். இது ஹோலோவீன் என்பது ஒரு கலாச்சாரமாகவே இருந்து வருகின்றது. நான் கூறியது போன்று, எதனையும் சரியான முறையில் சிந்தித்து ஆராயாமல் தமது குழந்தைகளை இவ்வாறானவற்றில் விழச் செய்து விடுகின்றார்கள். நாம் இதனை ஆழமாகச் சென்று பார்த்தோம் என்றால், இது கிறித்தவ மதத்திலிருந்து வெளிப்பட்ட இணைவைத்திலின் பக்கம் கொண்டு செல்லும் ஒரு கலாச்சாரம் ஆகும் என்பது தெரிய வரும். இவ்வாறான ஷய்த்தானிய செயல்கள் இவர்களை முன்னேற்றப் பாதையிலிருந்து தடுத்து வைத்திருக்கின்றது. கிறித்தவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். பொதுவாக இதனை ஒரு வேடிக்கையாக கருத்தப்படுகின்றது. இதனை குழந்தைகள் செய்து வர வேண்டும் என்று கருதுகின்றார்கள். எந்தவொரு வேடிக்கையாக இருந்தாலும் சரி அல்லது ஷிர்க் மற்றும் ஏகத்துவத்தின் மீது கலங்கத்தை ஏற்படுத்தும் விஷயத்திலிருந்து ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனது கவனமும் இதன் பக்கம் சென்றது. நமது Search Team -ன் Incharge என்னிடம் கூறினார்கள். எனது குழந்தை வண்ண வண்ண ஆடைகளை அணிந்து கொண்டு, முகமுடியினை அணிநது கொண்டு அந்த ஹோலோவீனின் கலாச்சாரத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி கேட்டாள். அவள் ஒரு சிறு குழந்தையாக இருக்கின்றாள். அவர்கள் அதில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை. இவ்விஷயத்தை நன்றாக ஆராயும்போது தீய விளைவே தென்பட்டது. அவர்கள் அதன் அறிக்கையை என்னிடம் கொடுத்தார்கள். நான் அதன் சுருக்கத்தை உங்கள் முன் வைக்கின்றேன். இந்த ஹோலோவீன் கலாச்சாரத்தில் ஏன் கலந்து கொள்ளக் கூடாது என்று ஒரு சில குழந்தைகள் என்னிடம் கேள்வி கேட்கின்றார்கள். இதனால் என்ன விளைவு ஏற்படப் போகிறது. அஹ்மதி குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தனது குழந்தைகளுக்கு அனுமதி வழங்குகின்றார்கள் என்று கேட்கின்றார்கள். அவர்களுக்கு நான் இது ஒரு தீய விளைவை ஏற்படுத்தும் செயலாகும். இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று பதில் கூறினேன். ஆனால் இதன் முடிவு எந்த அளவுக்கு நம் முன் வந்திருக்கின்றதென்றால் அதிலிருந்து ஒவ்வொரு அஹ்மதி குழந்தைகளும் தவிர்ந்திருக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் இருக்கும் இந்த கிறித்தவ கலாச்சாரமானது பழங்கால அயர்லாந்தைச் சார்ந்த பிற மதத்தின் பழக்கத்திலிருந்து தொன்றுதொட்டு வருகின்றது. இதன் சுருக்கம் என்னவென்றால், இந்த கலாச்சாரமானது சூனியத்தை அடிப்படையாக கொண்டதாகும். மேலும் இந்த கலாச்சாரமானது மதம் மற்றும் வீடுகளின் தூய்மையின் மீது கலங்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இதனை வேடிக்கையாகக் கருதி, எவ்வாறு செய்தாலும், எந்த வகையிலும் இதனை மேற்கொண்டாலும் இதன் அடிப்படை விஷயம் தவறாகும். அது மட்டுமல்லாமல் இதில் ஷிர்க்கும் இருக்கின்றது. ஏனென்றால் இதன் அடிப்படை கருத்தானது இந்த வேடிக்கையின் மூலம் உயிருள்ளவர்கள் மற்றும் மரணித்தவர்களுடன் உள்ள உறவு அக்டோபர் 31 ஆம் தேதி துண்டிக்கப்படுகிறது என்ற கண்ணோட்டம் இருக்கின்றது. பின்பு மரணித்தவர்கள் அந்நாளன்று வெளியேறி உயிருள்ளவர்களுக்கு தீங்கிழைக்க

வருகின்றனர். மேலும் உயிருள்ளவர்களுக்கு துன்பங்களை தருகின்றனர். நோயில் அகப்பட வைக்கின்றனர். பின்பு இதிலிருந்து தப்பிப்பதற்காக அவர்களின் பிரபல்யமான மந்திரவாதிகள் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் அவ்வாறான மக்களிடமிருந்து பிராணிகளை ஒரு சிறப்பான முறையில் குர்பானி செய்கின்றார்கள். இதுவும் அவர்களின் இவ்வாறான கண்ணோட்டத்தில் இருக்கின்றன. ஏனென்றால் அந்த மரணித்தவர்களின் தீங்கிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர். மேலும் அவ்வாறு குர்பானி செய்வதன் மூலம் அந்த மரணித்தவர்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள் என்றும் அவர்கள் கருதுகின்றனர். மேலும் அதை விரட்டுவதற்காக அதற்கென தனிப்பட்ட ஓர் உடையை அணிவிக்கப்படுகின்றது.

எவ்வாறிருந்த போதிலும் நான் கூறியது போன்று கிறித்தவர்கள் பரவும்போது பரவலாக இந்த கலாச்சாரத்தை உருவாக்கிக் கொண்டார்கள். இதுவும் அவர்களின் பண்டிகைகளின் ஒரு பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இதில் கத்தோலிக்கர்களும் சிறப்பாக இதனை கொண்டாடி வருகின்றனர்.

இப்போது இது கிறித்தவர்களின் மூலமாகவோ, மீடியாக்கள் மூலமாகவோ அல்லது ஒவ்வொருவரின் உறவின் மூலமாகவோ கணிசமான அளவு உலகில் பரவி விட்டது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்களும் இதனை கையாண்டு வருகின்றார்கள். தனது குழந்தைகளுக்கு பல வண்ண ஆடைகள் மற்றும் முகமுடியினை அணிவித்துக் கொண்டு வீடு வீடாக சென்று ஏதாவது ஒன்றைப் பெறுவார்கள். ஏனென்றால் வீட்டில் வசிப்பவர்களின் மனம் சாந்தமுடன் இருக்க வேண்டும். அதாவது துன்பமிழைக்கக்கூடிய மரணித்தவர்களிடமிருந்து நிம்மதி பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது. இது ஷிர்க் ஆகும். நீங்கள் இதனை ஓர் வேடிக்கையானது என்று கருதினாலும் இதன் அடிப்படை விஷயத்தை கவனத்தில் கொண்டால் இது ஷிர்க் ஆகும் என்பது தெரிய வரும். மேலும் இது ஓர் அஹ்மதி குழந்தையின் கண்ணியத்திற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய விஷயமாகும். அதாவது அவர்களுக்கு பல வண்ண ஆடைகளை அணிவித்து வீடு வீடாக பிச்சை எடுத்துக் கொண்டு அலைதல், அது அவர்களின் கண்ணியத்தை குறைக்கக் கூடியதாக அமையும். நாங்கள் சாக்லேட் தான் வாங்கச் சென்றோம் என்று கூறினாலும் இவ்வாறு கேட்டு வாங்குவது தவறாகும். அஹ்மதிகளுக்கென ஒரு கண்ணியம் இருக்க வேண்டும். அதனை சிறு வயதிலிருந்தே உருவாக்க வேண்டும்.

இவ்வாறான விஷயங்கள் மார்க்கத்திலிருந்து மக்களை விலக்கி விடுகின்றது. எவ்வாறிருந்த போதிலும் இதனை கொண்டாடும் போது இதிலிருந்து என்ன செய்தி வெளிப்படுகின்றது என்றால், தீய பார்வைகளைக் கொண்டவர்கள், ஷைத்தானுக்கு செய்யக்கூடிய பூஜை போன்ற அனைத்திலும் ஒரு வேடிக்கைக்காக மேற்கொள்வது எவ்விதத்திலும் தவறில்லை என்று கருதுகின்றனர். ஆனால், இது ஒரு மிகப்பெரிய தவறான கண்ணோட்டமாகும். இவையனைத்தும் ஷைத்தானிய செயலாகும். இதிலிருந்து நமது குழந்தைகள் கண்டிப்பாக விலகியிருக்கவே வேண்டும்.

நமது அருகாமையிலுள்ள கிராமத்திலும் இவ்வாறான குழந்தைகளுக்கு எவ்வித துன்பமும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்துடன் வீடு வீடாக பிச்சை எடுத்துக் கொண்டு செல்கின்றார்கள். எவ்வாறிருந்த போதிலும் குழந்தைகள் மட்டுமல்ல. பெரியவர்களும் இது சம்பந்தமாக கேட்கின்றார்கள். இது ஒரு தீய கலாச்சாரம் மட்டுமல்லாமல் ஷிர்க்கை நோக்கி எடுத்துச் செல்லக்கூடிய கலாச்சாரமாகும் என்பதை நான் அவர்களுக்கு கூறிக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த வேடிக்கை என்னும் பெயரில் நடைபெறக்கூடிய இந்த தீய கலாச்சாரம் மூலம் குழந்தைகள் மத்தியில் தீய பழக்கங்கள் உருவாகின்றன. மேலும் தனது பெற்றோருடனும் உற்றார் உறவினருடனும் மனிதர்களுடனும், தனது சமுதாயங்களுடனும் தனது பெரியோர்களுடனும் தவறான முறையில் நடந்து கொள்கின்றார்கள். இவ்வாறான குற்றச்சாட்டும் அதிகமாக உருவாகி வருகின்றன. இதனால் இன்னும் பலதரப்பட்ட தீய செயல்கள் பரவி வருகின்றன. இவ்வாறான செயல்கள் மூலம் இதனை செய்வதில் இன்னும் அதிகமான ஆர்வம் ஏற்பட்டு விடுகின்றது. மேற்கத்திய நாடுகளில் அனைத்து குழந்தைகளுக்கும் வேடிக்கை என்ற பெயரில் இதனை செய்வதற்கான அனுமதி கிடைத்து விடுகின்றது; கிடைத்துக் கொண்டிருக்கிறது.ஆனால் இப்போது தானே இதற்கு எதிராக கொடி காட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் அவர்களின் பழக்கங்கள் கெட்டு விட்டது என்றும் கூறுகின்றனர்.

ஹோலோவீனிற்கு எதிராக இவ்வாறும் கூறுகின்றனர். இவ்வாறாக Function என்ற பெயரில் அவர்கள் தீய செயல்களில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இதன் மூலம் தீய செயல்களும் பரவுகின்றன. இவ்வாறான Function சரியானதே அல்ல. இதனை செயல்ரீதியாக கொண்டு வந்தால் அல்லது மகிழ்ச்சிகரமானது என்று நினைத்து இதன்படி செயல்பட்டால் சமுதாயத்தில் தீய பழக்கமின்றி வேறு என்னதான் உருவாக முடியும்? நான் கூறியது போன்று மரணித்தவர்களை இறைவனுக்கு எதிராக நிலைநிறுத்தி அவர்கள் அதன் தீமையிலிருந்து தன்னை பாதுகாப்பதற்கான ஒரு வழியினை உருவாக்கி இருக்கின்றார்கள். ஆக, இவ்வாறு இதன் மூலம் அவர்கள் ஷிர்க்கை செய்து வருகின்றார்கள். மரணித்தவர்களை சந்தோஷப்படுத்துவது மற்றும் மந்திரவாதிகள் மூலமாக அவர்களை அச்சுறுத்துவது வீணானதும் எந்தப் பலனையும் தராத கண்ணோட்டமும் ஆகும். ஒரு மருத்துவர் Grace Ketterman M.B. என்னும் எழுத்தாளர் தமது ஒரு நூலாகிய You and your child problem –ல் இவ்வாறு எழுதுகின்றார்:

A tragic by product of fear in the lives of children as early as preadolescence is the interest and involvement in super natural occult phenomena.

இளமைப் பருவத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே குழந்தைகளிடத்தில் தன்னையும் அறியாமல் ஏற்படக்கூடிய அதிகப்படியான அச்சமானது அறிவற்ற செயல்களில் ஈர்க்கப்பட காரணமாக அமைந்து விடுகின்றது. இந்த ஹோலோவீன் மூலமாக உருவாகக் கூடிய இவ்விஷயமானது இத்தோடு முடிந்து விடுவதில்லை. மாறாக ஒரு சில பெரிய குழந்தைகளும் வீட்டிலுள்ளவர்களை பயமுறுத்துவதற்கு முன் வருகின்றனர். இதன் முடிவாக சமுதாயங்களில் எரிச்சலை உருவாக்கி விடுகின்றார்கள. தனது பெற்றோருக்கு ஒரு சுமையாகவும் ஆகவிடுகின்றார்கள். தனது வாழ்க்கையை அழித்து விடுகின்றார்கள். ஆகவே நான் மீண்டும் அஹ்மதிகளிடம் கூறிக் கொள்கிறேன். இவ்வாறான விஷயத்திருந்து தவிர்ந்திருப்பது அவசியமாகும். அஹ்மதி குழந்தைகள், பெரியவர்களின் வேலை என்னவென்றால் அவர்கள் இறைவனுடன் தமது தொடர்பை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். நமது குறிக்கோளை புரிந்து கொள்ளுங்கள். மேலும் எதனைப் பேசுவதற்கு இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அதனை பேசுங்கள். மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரமானது உங்கள் மத்தியில் நல்லது, கெட்டது என்பதை பிரித்தறிய முடியாத அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. மேலும் அதனால் இறைவனிடம் உள்ள தொடர்பினை மறந்து விடக் கூடாது. அந்த தாக்கத்தின் விளைவால் மறைமுக ஷிர்கிகலும் வீழ்ந்து விடக் கூடாது. அல்லாஹ் நம் அனைவரையும் இதிலிருந்து பாதுகாப்பானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன், நான் இறைவனை வணங்குகின்றேன் என்று வாதம் செய்கின்றான். ஆனால் இந்த வணக்கமானது அதிகமாக ஸஜ்தா, ருகூவினால் ஆக முடியுமா? அல்லது தஸ்பீஹ் மணிகளை அதிகமாக எண்ணுவதனால் அவர் இறைநேசர் என்று தன்னை கூறிக் கொள்ள முடியுமா? மாறாக இறை அன்பானது அவனை எந்த அளவுக்கு ஈர்க்க வேண்டும் என்றால் அவன் தன்னைத்தானே உலகத்திலிருந்து விலகியவனாக கருத வேண்டும். அப்போதுதான் அவன் சரியான வணக்கத்தை மேற்கொள்கிறான் என்று கூற முடியும். முதலில் இறை இருப்பின் மீது முழு நம்பிக்கை இருக்க வேண்டும். பிறகு இறைவனின் அழகான செயலை அறிந்து, எப்போதும் தனது உள்ளத்தில் பதிந்திருக்கும் வண்ணம் இறை நேசத்தை உருவாக்க வேண்டும். மேலும் இது நிலையாக எப்போதும் முகத்தில் வெளிப்பட வேண்டும். உலகத்தின் அனைத்து பொருளும் அவனுக்கு முன் மரணித்ததாக ஆகும் அளவிற்கு உள்ளத்தில் அவனது அச்சமும் அவனை சார்ந்தவையாகவே இருக்க வேண்டும். அவன் வழியில் ஏற்படும் வேதனை கூட ஓர் இனிமையாக இருக்க வேண்டும். மேலும் அவனை விட்டு விட்டு மனம் வேறு எதனையும் பின்பற்றக் கூடாது. இவ்வாறான நிலை ஏற்பட்டால் தான் அது உண்மையான இறை வணக்கமாக இருக்க முடியும். மேலும் இது இறை உதவி இல்லாமல் வேறு எவ்வாறுதான் கிடைக்க முடியும்? இதனால் தான் இறைவன் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் – நான் உன்னையே வணங்குகிறேன். உன்னிடமே உதவியும் தேடுகிறேன் என்ற சொல்லை கற்றுத் தந்திருக்கின்றான். அதாவது நாங்கள் உன்னைத்தான் வணங்குகின்றோம். ஆனால் எப்போது வரை உன்னிடமிருந்து ஒரு சிறப்பான உதவி கிடைப்பதில்லையோ அதுவரை நாங்கள் எவ்வாறு உண்மையான

வணக்கத்தை செலுத்துபவர்களாக ஆக முடியும். அல்லாஹ்வை தனது உண்மையான இறைவன் எனக் கருதி அவனை வணங்குவதே உண்மையான இறைநேசம் ஆகும். இதற்கு அப்பால் வேறு எந்த தர்ஜாவும் கிடையாது. மேலும் இந்த தர்ஜாவானது அவனது உதவி இல்லாமல் கிடைக்காது. இதற்கான அடையாளம் என்னவென்றால் இறை வல்லமை உள்ளத்தில் பதிய வேண்டும். இறைநேசம் உள்ளத்தில் பதிய வேண்டும். மனம் அவனையே நாட வேண்டும். அவனையே விரும்ப வேண்டும். அனைத்து விஷயங்களின் மீதும் அவனை நினைக்க வேண்டும். மேலும் அவனது திருப்தியே தனது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டம். மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று தனது கையினால் குழந்தையை பலியிட கட்டளை வந்தாலும் இவ்வாறான கடுமையான கட்டளையைக் கூட அவனின் அன்பிற்காக செய்ய முன் வர வேண்டும். தனது எஜமானரின் கீழ்படிதலின் விஷயத்தில் எந்தவித குறையும் இல்லாத அளவிற்கு நடந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இது மிக கஷ்டமான வழியாகவும் இருக்கின்றது. ஆனால் அதே நேரம் இந்த பயணமானது மிகவும் சுவையான பயணமாகும். இவ்வாறான வழியை மேற்கொண்டு இந்த சுவையான பானத்தை பருகுபவர் மிகவும் குறைவாகவே உள்ளனர். விபச்சாரத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல. கொலை செய்யாமல் இருப்பதும் மிகப்பெரிய விஷயமல்ல. மேலும் பொய் சாட்சி கூறாமல் இருப்பதும் கூட ஒரு பெரிய விஷயமல்ல. ஆனால் இவ்வனைத்து நல்ல விஷயங்களையும் இறைவனைப் பெற்றுக் கொள்வதற்காக செய்ய வேண்டும்; அவனது அன்பைப் பெறுவதற்காக அனைத்து கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும்; ஆக இவ்வாறான தர்ஜாவை மேற்கூறியவர்களைத் தவிர வேறு எவராலும் பெற முடியாது. இந்த இபாதத்தை மேற்கொள்வதற்காகத்தான் மனிதன் கட்டளை இடப்பட்டிருக்கின்றான். எப்போது ஒருவர் இதனை மேற்கொள்கின்றாரோ அப்போது தான் அவரது செயலின் விளைவாக இறைவனின் செயல் வெளிப்படுகின்றது. அதன் பெயர் இனாம் (அருள்கள்) ஆகும். இறைவன் திருக்குர்ஆனில், இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் – எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக! நீ அருள் புரிந்தவர்களின் வழியில் எங்களை நடத்துவாயாக! என்று கூறுகின்றான். இவ்வாறு இறைவன் புறமிருந்து அருள் செய்யப்பட்ட மக்களே அடையாளங்களையும் அற்புதங்களையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

அல்லாஹ் நம் அனைவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின்படி செயல்படவும், அன்னாரின் எதிர்பார்ப்பை முழுமைப்படுத்தக் கூடியவர்களாவும் ஆவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! நீங்களும் முயற்சி செய்யுங்கள. அல்லாஹ் உங்களின முயற்சியில் அருள் புரிவான். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 29.10.2010

Translated by : **Maulvi R. ABDULLAH**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**